# தமிழ் – பத்தாம் வகுப்பு
## (வினாத்தாள் வடிவமைப்பின்படி – செய்யுள், உரைநடை வினாக்கள்)
## (செய்யுள் வினாக்கள்)

### குறு வினா (செய்யுள்) ( இயல்கள் – 1, 3, 5, 6, 7, 9)

1. மாணிக்க வாசகர், இறைவனிடம் எவ்வாறு வேண்டுகிறார் ?
2. உயிரினும் ஓம்பப்படுவது எது ? ஏன் ?
3. நன்றிக்கு வித்தாவது எது ?
4. என்றும் இடும்பை தருவது எது ?
5. பல கற்றும் கல்லாதவராகக் கருதப்படுபவர் யார் ?
6. கூகையையும் காக்கையையும் எடுத்துக்காட்டி வள்ளுவர் விளக்குவது யாது ?
7. ஞாலம் கருதினுங் கைகூடும். எப்போது ?
8. ஞாலம் வெல்லக் கருதுபவர் யாது செய்வர் ?
9. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது ?
10. செய்தற்கரிய செயல் செய்வது எப்போது ?
11. கொக்கை உவமையாகக் காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது ?
12. காலமறிந்து செயல்படுவது எவ்வாறு ?
13. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?
14. பாரதிதாசன் திருவள்ளுவரை எவ்வாறு புகழ்ந்துள்ளார் ?
15. ஒழுக்கத்தால் எய்துவது எது ? இழுக்கத்தினால் எய்துவது எது ?
16. ஏலாதி – நூற்குறிப்பு எழுதுக.
17. கணிமேதாவியார் – குறிப்பு எழுதுக.
18. பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை ?
19. கம்பர் – சிறு குறிப்பு எழுதுக.
20. கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை ? யாருக்குக் கொண்டு சென்றான் ?
21. குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான் ?
22. குகனின் வேண்டுகோள் யாது ?
23. “அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம்” – யார், யாரிடம் கூறியது ?
24. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர் ?
25. அப்பூதியடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்தார் ?
26. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன ?
27. வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார் ?
28. மூத்த திருநாவுக்கரசுக்கு நேர்ந்ததென்ன ?
29. திருநாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசரை எங்ஙனம் உயிர்த்தெழச் செய்தார் ?
30. “நும்பேர் எழுதாதே வேறொரு பேர் முன்னெழுத வேண்டிய காரணம் என் கொல்” – யார் யாரிடம் கூறியது ?
31. “இப்போது இங்கு அவன் உதவான்” – யார், யாரிடம் கூறியது ?
32. வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை யாவை ?
33. வயல்தரும் விளைவுகளாகத் தமிழ் விடுதூது கூறுவன யாவை ?
34. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர் ?
35. வன்மையுள் எல்லாந் தலையாயது எது ?
36. யாருக்குப் பகைவராலும் தீங்கு செய்ய இயலாது ?
37. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார் ?
38. நல்லார் தொடர்பு கைவிடல் எத்தன்மைத்து ?
39. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது ?
40. பகைமை இருளைப் போக்குவது எதுவென வள்ளுவர் கூறுகிறார் ?
41. வேந்தற்குரிய பொருள்கள் எவை ?
42. சிவபெருமான் எத்தன்மையன் என நாவுக்கரசர் கூறுகிறார் ?
43. தேவாரம் – பொருள் எழுதுக.

44. ஆற்றுதல் என்பது யாது ?
45. பண்பு எனப்படுவது யாது ?
46. அறிவு எனப்படுவது யாது ?
47. கலம்பக நூல்களுள் முதல் நூல் எது ?
48. கலம்பக உறுப்புகள் நான்கனை எழுதுக.
49. நந்திக் கலம்பகம் யார் மீது பாடப்பெற்றது ?
50. நந்திவர்மன் வீரம் எத்தகையது ?
51. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன ?
52. குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர் ?

## சிறு வினா (செய்யுள்) (இயல்கள் – 2, 3, 4, 8, 10)

1. வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான் ?
2. கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறியவற்றை எழுதுக.
3. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை ?
4. கண்ணகிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாது ?
5. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை ?
6. தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை ?
7. கம்பராமாயனம் – சிறு குறிப்பு எழுதுக.
8. சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியதென்ன ?
9. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை ?
10. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழித் தொகுத்து எழுதுக.
11. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுபவன யாவை ?
12. சீறாப் புராணம் குறிப்பு வரைக.
13. புலியின் கொடுங்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை ?
14. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.
15. ‘‘சாதனைப் பூக்கள்’’ என்று எவற்றை இளந்திரையன் கூறுகிறார் ?

## நெடுவினா (செய்யுள்) (இயல்கள் 1 – 5 (அ) 6 – 10)

1. ஒழுக்கமுடை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
2. காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக.
3. ‘‘தேரா மன்னா’’ என விளித்துக் கண்ணகி கூறியன யாவை ?
4. கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.
5. குகனுக்கும் இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தொகுத்து எழுதுக.
6. கங்கையின் மறுகரை அடைந்த குகனிடம் இராமன் கூறியவற்றைத் தொகுத்தெழுதுக.
7. அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் மேல் கொண்டிருந்த பற்றினை விவரிக்க.
8. திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தலைக் கண்டு வியந்த நிகழ்ச்சியைத் தொகுத்தெழுதுக.
9. அப்பூதியடிகளார் இல்லத்தில் நிகழ்ந்தனை விவரிக்க.

## உரைநடை – வினாக்கள்

## குறுவினா – உடைநடை (இயல்கள் – 1, 5, 6, 7, 8, 9, 10)

1. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய, இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை ?
2. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது ?
3. தமிழ்மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.
4. மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை ?
5. ஒரு மொழி நிலைபெற்று நிற்பதற்குரிய தகுதிபாடுகள் யாவை ?
6. மொழி மாற்றம் என்றால் என்ன ?

7. கல்விப் படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை ?
8. திரைப்படச்சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை ?
9. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை ?
10. ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை ?
11. ஞாலம் – பெயர்க்காரணம் கூறுக.
12. கண்ணிடந்து அப்பியவர் யார் ? அவர் வரலாறு உணர்த்தும் செய்தி யாது ?
13. அமெரிக்க இதழாசிரியரிடம் காந்தியடிகள் பற்றிப் பெண்மணி கூறியது யாது ?
14. காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது ?
15. இயேசுவின் மலைப்பொழிவு நூலைப்படித்துக் காந்தியடிகள் உணர்ந்தது என்ன ?
16. காந்தியடிகளுக்கு இளம் பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர்பண்புகள் யாவை ?
17. காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை ?
18. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார் ?
19. எவற்றை அறநெறியாகப் போற்ற வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார் ?
20. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது ?
21. இராமலிங்கர் எங்கு ? எப்போது பிறந்தார் ?
22. இராமலிங்கர் புதுநெறிகண்ட புலவர் எனப் போற்றப்படக் காரணம் என்ன ?
23. சத்திய தருமசாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது ?
24. வளரும் பிள்ளைகளுக்கு இராமலிங்கர் வழங்கிய அறிவுரைகளுள் இரண்டினைக் கூறுக.
25. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியினைப் பெறுதல் வேண்டும் ?
26. தற்போது வளர்ந்துவரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை ?
27. பட்டப் படிப்புகளில் எவையேனும் நான்கினை எழுதுக.
28. இடைநிலையாசிரியர் பயிற்சி குறித்து எழுதுக.

### சிறு வினாக்கள் (உரைநடை) (இயல்கள் – 2, 3, 4, 6, 8)

1. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை ?
2. பெண்ணுரிமையை விளக்குக.
3. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை ?
4. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை ?
5. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது ?
6. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும் ?
7. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.
8. பேச்சுக் கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல் வேண்டும் ?
9. கடல் வாணிகம் குறித்து எழுதுக.
10. உழவுத் தொழில் குறித்து எழுதுக.
11. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது ? விளக்குக
12. மனித நேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?
13. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

### நெடுவினாக்கள் (உரைநடை) (இயல்கள் 1 – 5 (அ) 6 – 10)

1. செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.
2. பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்து எழுதுக.
3. பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவனவற்றை எழுதுக.
4. அம்பேத்காரின் அரும்பணிகள் குறித்து தொகுத்து எழுதுக.
5. அம்பேத்கார் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார் ?
6. மேடைப்பேச்சு சிறப்புற அமைவதற்கான வழிவகைகள் யாவை ?
7. மேடைப்பேச்சின் கூறுகளை விளக்குக.
8. திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப் பணிகளைத் தொகுத்தெழுதுக.

ஆ. பன்னீர் செல்வம்
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்)
அரசு உயர்நிலைப் பள்ளி
கங்கலேரி – 635 122
கிருஷ்ணகிரி மாவட்டம்
அலைபேசி . 9940731517